# ஏப்ரல்- 11- புதன்
## புனித இஸ்தனிஸ்லாஸ்
## ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்: திபா. 34:8

### முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்5:17 – 26

தலைமைக் குருவும் அவரைச் சேர்ந்த சதுசேயக் கட்சியினர் அனைவரும் பொறாமையால் நிறைந்துதிருத்தூதரைக் கைது செய்து பொதுச் சிறையில் காவலில் வைத்தனர்.ஆனால் இரவில் ஆண்டவரின் தூதர் சிறைச் சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துச் சென்று,"நீங்கள் போய்க் கோவிலில் நின்று வாழ்வு பற்றிய வார்த்தைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள்" என்றார்.இதைக் கேட்ட அவர்கள் பொழுது விடிந்ததும் கோவிலுக்குச் சென்று கற்பித்தார்கள். தலைமைக் குருவும் அவரைச் சேர்ந்தவர்களும் அனைத்து இஸ்ரயேல் மக்களின் ஆட்சிப் பேரவையாகிய தலைமைச் சங்கத்தைக் கூட்டித் திருத்தூதர்களைச் சிறையிலிருந்து கொண்டு வருமாறு ஆள் அனுப்பினார்கள்.அந்த ஏவலர்கள் அங்கு வந்தபோது சிறையில் அவர்களைக் காணவில்லை. எனவே அவர்கள் திரும்பி வந்து,"நாங்கள் சிறைச்சாலை உறுதியாய்ப் பூட்டப்பட்டிருப்பதையும், காவலர் வாயிலருகில் நின்றுகொண்டிருப்பதையும் கண்டோம். ஆனால் கதவைத் திறந்தபோது உள்ளே எவரையும் காணவில்லை" என்று அறிவித்தார்கள்.இவ்வார்த்தைகளைக் கேட்ட கோவில் காவல் தலைவரும், தலைமைக் குருக்களும் அவர்களுக்கு என்னதான் நேர்ந்திருக்கும் என்று மனங்குழம்பி நின்றனர்.அப்பொழுது ஒருவர் வந்து, "நீங்கள் சிறையில் அடைத்து வைத்திருந்த மனிதர்கள், அதோ! கோவிலில் நின்று மக்களுக்குக் கற்பிக்கின்றனர்" என்று அவர்களிடம் அறிவித்தார்.உடனே காவல்தலைவர் ஏவலர்களுடன் கோவிலுக்குச் சென்று அவர்களை அழைத்துச் சென்றார். மக்கள் கல்லெறிவார்கள் என்று அவர் அஞ்சியதால் வன்முறை எதுவும் கையாளவில்லை.

**பதில்பாடல் :** ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்.

### நற்செய்தி : யோவான் 3 : 16 – 21

அக்காலத்தில் இயேசு நிக்கதேமிடம் கூறியதாவது:தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்.அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை.ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர். இதில்தான் அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது.தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை.உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்" என்றார்.

**தியானம்:** நிறை ஒளி மனதில் ஒளிரும் போது மனிதன் தன் தாழ்மையை நன்கு உணர்ந்து தன்னுள்ளிருந்து தோன்றும் இயல்பான பதிலை வெளியிடுகிறான்." நானே உலகின் ஒளி என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்" (அரு.8:12)என்றார் இயேசு. மனிதரின் ஒளியான இயேசு இருளில் உலாவும் மனிதரில் ஒளிர்ந்தார்.பிரகாசிக்கும் இயற்கை ஒளியில் ஒன்றும் மறைவாய் இருக்க முடியாதது போல இருள் படர்ந்த மனிதனின் விண்ணொளி கூர் வீசி ஒளிரும் போது அவன் தன் உண்மை நிலையைக் கண்ணுறுகின்றான். உணர்ந்த உண்மையை உணர்ந்த வாறு அடியவன், ஊழியன், அடிமை, பாவியென அறிக்கையிடுகின்றான். இந்த அறிக்கை உண்மையை உரைப்பதால் அங்கு உண்மையான தாழ்ச்சி நிலவுகிறது. உண்மையை உள்ளபடியே ஏற்றுக்கொள்வதால் தான் உண்மையான தாழ்ச்சி வெளிப்படுகிறது. மிகுந்த தாழ்ச்சி உடையவர்களே ஒளியைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே தகுதியற்றவர்கள் என்று நம்மைத்தாழ்த்தும் போது மேலும் ஒளி நம்மை வந்தடைகிறது. இதனால் நாமும் இறை ஒளி பெற்ற மக்களாக வாழ இறைவனிடம் வேண்டுவோம்.